அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
(17.08.2017 முதல் 21.08.2017 வரை)
தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை– 612 101
போன்: 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in Fax: 0435 2472881

==============================================================

தேதி:16.08.2017

**கடந்த 5 நாட்களில் நிலவிய வானிலை (11.08.2017–15.08.2017)**

| காரணிகள் | கடந்த நாட்களில் வானிலை |
|---|---|
| மழை (மி.மீ.) | 32.9 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 33 – 37 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 22 – 26 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 6 – 7 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 42 – 91 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 6 – 17 |

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>17.08.2017 | நாள் 2<br>18.08.2017 | நாள் 2<br>19.08.2017 | நாள் 4<br>20.08.2017 | நாள் 5<br>21.08.2017 |
| மழை (மி.மீ.) | 0 | 1 | 2 | 2 | 3 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 36 | 37 | 37 | 38 | 37 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 24 | 25 | 25 | 26 | 26 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 7 | 5 | 5 | 5 | 4 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 80 – 85 | 75 – 80 | 75 – 80 | 70 – 75 | 70 – 75 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 6 | 8 | 8 | 10 | 8 |
| காற்றின் திசை | மேற்கு | மேற்கு | தென்மேற்கு | தென்மேற்கு | தென்மேற்கு |

17.08.2017 முதல் 21.08.2017 வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஏதிர்ப்பார்க்கப்படும் மழை அளவு 1 – 3 மி.மீ.

***வேளாண் அறிவுரைகள் :***

**பயிர் : நெல்**

**பருவம் : குறுவை : தண்டு உருளும் பருவம் சம்பா : நிலம் தயாரித்தல் மற்றும் விதைத்தல்.**

- குறுவை நெற்பயிரில் தூர்கட்டும் பருவத்தில், 1 ஏக்கருக்கு தழைச்சத்து உரமான 25 கிலோ யூரியாவையும், சாம்பல் சத்து உரமான 10 கிலோ முரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தினையும் கலந்து வயலில் சீராக தண்ணீர் வைத்து தூவவும்.
- முன்பட்ட சம்பாவிற்கு சி.ஆர். 1009 மற்றும் ஆடுதுறை 50 என்ற இரகங்களை நாற்றுவிட சிபாரிசு செய்யப்படுகிறது.
- சம்பா வயல்களில் நேரடிவிதைப்பு செய்யும் பொழுது டிராக்டர் மூலம் விதைக்கும் கருவிக்கு ஏக்கருக்கு 15 கிலோ மற்றும் ஆட்கள் கொண்டு தெளிக்கும் பொழுது ஏக்கருக்கு 30 கிலோ விதை அளவும் பரிந்துரைக்கப்படுகிறது. விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள் மூலம் பரவக்கூடிய நோய் கிருமிகள் அழிந்து விடும்.

**கால்நடைகளுக்கு**

- கோழிபண்ணைகளில் அடர்த்தியான ஈரப்பதத்துடனும் கூடிய ஆழ்கூளம் அதிக வெப்பத்தை வெளிப்படுத்தும். ஆகவே ஆழ்குகூளம் 6 செ.மீ-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
  ஒரு டன் முட்டை கோழி தீவனத்தில் 1 கிலோ சோடியம் பைகார்பனேட்டை சேர்ப்பதால் வெப்ப அயர்ச்சியை தவிர்ப்பதுடன் முட்டை ஓட்டின் அடர்த்தியும் அதிகரிக்கும

ஒம்/- வெ. இரவி.
இயக்குநர்

/உண்மை நகல்/

பேராசிரியர்(உழவியல்)